**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு.S.கணேஷ்., எம்.காம்., எம்.எல்.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**2024ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 23–ஆம் நாள் புதன்கிழமை**
**I.A.1030/2018 in O.S.231/2018**

1. அரிகிருஷ்ணன்
2. சம்மந்தமூர்த்தி
3. மணிக்கண்ணன் .... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. ஜோதி
2. மாவட்ட ஆட்சியர்,
அரியலூர் மாவட்டம் ஆட்சியர் அலுவலகம்,
அரியலூர் & அஞ்சல்,
அரியலூர் தாலுக்கா, அரியலூர் மாவட்டம்.
3. வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்,
கோட்டாட்சியர் அலுவலகம்,
உடையார்பாளையம் & அஞ்சல்,
உடையார்பாளையம் தாலுக்கா,
அரியலூர் மாவட்டம்.
4. வருவாய் வட்டாட்சியர் அவர்கள்,
உடையார்பாளையம் வட்டாட்சியர் அலுவலகம்,
ஜெயங்கொண்டம் & அஞ்சல்,
உடையார்பாளையம் தாலுக்கா,
அரியலூர் மாவட்டம். ...எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இவ்வழக்கு கடந்த 05.12.2023 தேதியன்று என் முன்பு விசாரணைக்கு வந்ததில் மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.S.ஸ்டாலின், அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.வேல்முருகன் அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல்4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்ய போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும் எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும், இருதரப்பு வாதம் கேட்டும், மனு, பிரமாணவாக்குமூலம் மற்றும் எதிருரை ஆகியவற்றை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழக்கிடும்,

**உத்தரவு**

1. இம்மனுவானது மனுதாரர் சி.பி.சி. ஆர்டர் 26 ரூல் 9 மற்றும் பிரிவு 151–ன் படி அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களுக்காக சமூகம் நீதிமன்ற வழக்கறிஞர்களில் ஒருவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்து உடன் வழக்கு சொத்தினை

பார்வையிட்டு இடைக்கால அறிக்கையும் வரைபடமும் தாக்கல் செய்ய உத்தரவிட்டும் பின்னர் வழக்கில் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் கண்டுள்ள பூஸ்ததி அமைப்புகளை பார்வையிட்டு பிராதில் குறிப்பிட்டுள்ள சொத்து விபரத்தில் கண்டுள்ள பாதை அமைப்பு பொறுத்து அறிக்கை வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவு பிறப்பிக்க வேண்டி மனுதாரர்கள் தரப்பில் பிரார்த்திக்கிறார்கள்.

2. 1ம் <u>மனுதாரரின் மனுவின் சுருக்கம் :-</u>

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், 2 மற்றும்3 மனுதாரர்கள் மனுதாரரின் சகோதர்கள் தங்கள் அனைவருக்கும் ஒரே கட்சி என்பதால் மனுதாரர் அவர்களுக்காகவும் அபிடவிட்டினை தாக்கல் செய்துள்ளதாகவும், மனு தாவா சொத்துக்களான ஏ,பி, மற்றும் சி ஷெட்டியூல் சொத்துக்கள் ஆதியில் ஒரே சொத்துக்களாக இருந்து மனுதாரர்கள் வசதிக்கு ஏற்ப மனு ஏ மற்றும் சி ஷெட்டியூல் சொத்துக்களில் வீடு கட்டி குடியிருந்து கொண்டு ஏ ஷெட்டியூல் சொத்தில் கட்டுப்பட்ட பூர்வீக சொத்தான பி ஷெட்டியூல் சொத்தை மனுதாரர்கள் குடும்பத்திற்கு மட்டும் பாதையாக பயன்படுத்தி வருவதாகவும், 1ம் எதிர்மனுதாரருக்கு மனு பி ஷெட்டியூல் சொத்திற்கும் கீழ்புரம் வீடு உள்ளது என்றும், மனு ஏ மற்றும் பி ஷெட்டியூல் மனுதாரர்கள் சொத்திற்கும் மற்றும் 1ம் எதிர்மனுதாரரின் வீட்டிற்கும் தென்புரம் கீழ்மேலாக தார்ரோடு செல்வதிலிருந்து 1ம் பிரதிவாதி அவரது வீட்டிற்கு நேரடியாக செல்லலாம் என்றும், மேற்படி கீழ்மேல் ரோட்டிலிருந்து தென் வடலாக மனுதாரர்கள் சொத்தான தாவா பி ஷெட்டியூல் சொத்து உள்ளது என்றும், 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட டி ஷெட்டியூல் சொத்து மனு சி ஷெட்டியூல் மேற்புரமும், ஏ ஷெட்டியூலுக்கு வடபுரமும் உள்ளது என்றும், மேற்படி டி ஷெட்டியூல் சொத்திற்கு மேற்படி சொத்திற்கு தென்புரம் உள்ள கீழ்மேலாக செல்லும் தார் ரோட்டிலிருந்து உள்வெளி சென்று வர தனியாக பாதை மேல்புரம் உள்ளது என்றும், மேற்படி பாதையை 1ம் எதிர்மனுதாரர் பயன்படுத்தி டி ஷெட்டியூல் சொத்திற்கு உள்வெளி சென்று வந்து பயன்படுத்தி வருகிறார் என்றும், தாவா பி ஷெட்டியூல் சொத்தில் உள்ள பொதுப்பாதையினை மனுதாரர் இடையூறு செய்யக்கூடாது என்று உறுத்துக்கட்டளை பெற்று உள்ளார் என்றும், தாவா பி ஷெட்டியூல் சொத்திற்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் எக்காலத்திலும், எவ்வித பாத்தியதையோ, உரிமையோ அனுபவமோ அறவே கிடையாது என்றும், தாவா பி ஷெட்டியூல் சொத்து மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து என்றும், அது அரசு புறம்போக்கு அல்ல என்றும், தாவா பி ஷெட்டியூல் சொத்து வருவாய் ஆவணங்களில் பொதுபாதை

என்று கண்டுள்ளது என்றும், மனுதார்களுக்கு மட்டும் பாத்தியப்பட்ட பொதுபாதை அதில் 1ம் எதிர்மனுதாரருக்கோ வேறு எவருக்கும் எக்காலத்திலும் எவ்வித பாத்தியதையோ உரிமையோ அறவே கிடையாது என்றும், பி ஷெட்டியூல் சொத்தில் உள்ள பாதையினை பயன்படுத்தி எக்காலத்திலும் 1ம் எதிர்மனுதாரர் தாவா டி ஷெட்டியூல் சொத்திற்கு சென்றதுமில்லை செல்லவும் முடியாது என்றும், தாவா பி ஷெட்டியூல் சொத்தான பாதை தாவா சி ஷெட்டியூல் சொத்துடன் முடிவடைந்து விடுகிறது என்றும், மனு சி ஷெட்டியூல் சொத்து மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட கிரைய சொத்து என்றும், அதில் மனுதாரர்கள் வீடு கட்டி வசித்து வருவதில் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட கிரைய சொத்தான சி ஷெட்டியூல் சொத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கு எவ்வித உரிமையோ, பாத்தியதையோ கோர அருகதையற்றவராவார் என்றும், வழக்கு சொத்தின் பூஸ்திதி அமைப்புகள் பொறுத்து சமூகம் கோர்ட் வழக்கறிஞர் ஒருவரை நியமணம் செய்து அறிக்கையும் வரைபடமும் பெறப்பட்டால் பின்னிட்டு வாய்மொழி சாட்சியங்கள் குறைக்கப்படும் என்றும், 1ம் எதிர்மனுதாரர் பூஸ்திதி அமைப்புகளை மாற்றிவிட்டால் வழக்கிற்கும் மனுதாரர்களுக்கும் பெருத்த கஷ்டநஷ்டம் ஏற்படும் என்றும் ஆதலால் சமூகம் நீதிமன்ற வழக்கறிஞர்களில் ஒருவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்து உடன் வழக்கு சொத்தினை பார்வையிட்டு இடைக்கால அறிக்கையும் வரைபடமும் தாக்கல் செய்ய உத்தரவிட்டும் பின்னர் வழக்கில் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் கண்டுள்ள பூஸ்ததி அமைப்புகளை பார்வையிட்டு பிராதில் குறிப்பிட்டுள்ள சொத்து விபரத்தில் கண்டுள்ள பாதை அமைப்பு பொறுத்து அறிக்கை வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவாக வேண்டி மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3. 1ம் எதிர்மனுதாரரின் எதிருரையின் சுருக்கம்:-</u>

மனுதாரர்கள் மனு சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும், தாவா பி ஷெட்டியூல் சொத்து சர்க்கார் புறம்போக்கு பொது சந்து பொது பாதை என்றும், தாவா டி ஷெட்டியூல் சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியமானது என்றும், தாவா பி ஷெட்டியூல் சொத்திற்கு பாதையாக தாவா பி ஷெட்டியூல் சொத்து உள்ளது என்றும், பி ஷெட்டியூல் சொத்தின் புலப்படம் (F.M.B) ஐ பார்த்தால் பி ஷெட்டியூல் சொத்து, டி ஷெட்டியூல் சொத்திற்கு பாதையாக பயன்படுவது தெளிவாக தெரிகிறது என்றும், வாதிகள் தாவாவில் பி ஷெட்டியூல் சொத்து பாதையாக உள்ளதை ஒப்புக்கொள்கிறார்கள் என்றும், தாவா சி ஷெட்டியூல் சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியமனது என்றும், பி ஷெட்டியூல் ச.எண்.395/10 சர்க்கார் புறம்போக்கு பொது சந்தினை அனைவரும் பாதையாக

பயன்படுத்தி வருகிறார்கள் என்றும், 1994–1995ம் ஆண்டில் ஏற்பட்ட வருவாய் துறையினரின் ஆவணத்தினை பொறுத்து, பல ஆண்டுகள் கழித்து தற்போது தாவா தாக்கல் செய்துள்ளது தாவா காலவரையறை சட்டத்தால் தடை செய்யப்பட்ட ஒன்று என்றும், ஆகவே மனுதாரர்களின் மனுவை 1ம் எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுப்படி செய்யவேண்டும் என்று குறிப்பிட்டு இவ்வெதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியம் கொடுக்கப்படவில்லை. சான்றாவணம் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவேனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பது தான்.

<u>6) பிரச்சனைக்கான தீர்வு:–</u>

மனுதாரர் தரப்பு வாதத்தில் தாவா பி ஷெட்டியூல் சொத்திற்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் எக்காலத்திலும், எவ்வித பாத்தியதையோ, உரிமையோ அனுபவமோ அறவே கிடையாது என்றும், தாவா பி ஷெட்டியூல் சொத்து மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து என்றும், அது அரசு புறம்போக்கு அல்ல என்றும், தாவா பி ஷெட்டியூல் சொத்து வருவாய் ஆவணங்களில் பொதுபாதை என்று கண்டுள்ளது என்றும், மனுதார்களுக்கு மட்டும் பாத்தியப்பட்ட பொதுபாதை அதில் 1ம் எதிர்மனுதாரருக்கோ வேறு எவருக்கும் எக்காலத்திலும் எவ்வித பாத்தியதையோ உரிமையோ அறவே கிடையாது என்றும், பி ஷெட்டியூல் சொத்தில் உள்ள பாதையினை பயன்படுத்தி எக்காலத்திலும் 1ம் எதிர்மனுதாரர் தாவா டி ஷெட்டியூல் சொத்திற்கு சென்றதுமில்லை செல்லவும் முடியாது என்றும், தாவா பி ஷெட்டியூல் சொத்தான பாதை தாவா சி ஷெட்டியூல் சொத்துடன் முடிவடைந்து விடுகிறது என்றும், மனு சி ஷெட்டியூல் சொத்து மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட கிரைய சொத்து என்றும், அதில் மனுதாரர்கள் வீடு கட்டி வசித்து வருவதில் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட கிரைய சொத்தான சி ஷெட்டியூல் சொத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கு எவ்வித உரிமையோ, பாத்தியதையோ கோர அருகதையற்றவராவார் என்றும், வழக்கு சொத்தின் பூஸ்திதி அமைப்புகள் பொறுத்து சமூகம் கோர்ட் வழக்கறிஞர் ஒருவரை நியமணம் செய்து அறிக்கையும் வரைபடமும் பெறப்பட்டால் பின்னிட்டு வாய்மொழி சாட்சியங்கள் குறைக்கப்படும் என்றும், 1ம் எதிர்மனுதாரர் பூஸ்திதி அமைப்புகளை மாற்றிவிட்டால் வழக்கிற்கும் மனுதாரர்களுக்கும் பெருத்த கஷ்டநஷ்டம் ஏற்படும் என்றும் ஆதலால் சமூகம்

நீதிமன்ற வழக்கறிஞர்களில் ஒருவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்து உடன் வழக்கு சொத்தினை பார்வையிட்டு இடைக்கால அறிக்கையும் வரைபடமும் தாக்கல் செய்ய உத்தரவிட்டும் பின்னர் வழக்கில் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் கண்டுள்ள பூஸ்ததி அமைப்புகளை பார்வையிட்டு பிராதில் குறிப்பிட்டுள்ள சொத்து விபரத்தில் கண்டுள்ள பாதை அமைப்பு பொறுத்து அறிக்கை வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவாக வேண்டும் என்று குறிப்பிட்டு வாதத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

7. 1ம் எதிர்மனுதாரர் தரப்பு வாதத்தில் தாவா பி ஷெட்டியூல் சொத்து சர்க்கார் புறம்போக்கு பொது சந்து பொது பாதை என்றும், தாவா டி ஷெட்டியூல் சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியமானது என்றும், தாவா பி ஷெட்டியூல் சொத்திற்கு பாதையாக தாவா பி ஷெட்டியூல் சொத்து உள்ளது என்றும், பி ஷெட்டியூல் சொத்தின் புலப்படம் (F.M.B) ஐ பார்த்தால் பி ஷெட்டியூல் சொத்து, டி ஷெட்டியூல் சொத்திற்கு பாதையாக பயன்படுவது தெளிவாக தெரிகிறது என்றும், வாதிகள் தாவாவில் பி ஷெட்டியூல் சொத்து பாதையாக உள்ளதை ஒப்புக்கொள்கிறார்கள் என்றும், தாவா சி ஷெட்டியூல் சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியமனது என்றும், பி ஷெட்டியூல் ச.எண்.395/10 சர்க்கார் புறம்போக்கு பொது சந்தினை அனைவரும் பாதையாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றும், 1994–1995ம் ஆண்டில் ஏற்பட்ட வருவாய் துறையினரின் ஆவணத்தினை பொறுத்து, பல ஆண்டுகள் கழித்து தற்போது தாவா தாக்கல் செய்துள்ளது தாவா காலவரையறை சட்டத்தால் தடை செய்யப்பட்ட ஒன்று என்றும், ஆகையால் மனுதாரர்களின் மனு தள்ளுப்படிக்குரியது என்றும் வாதத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

8. மேற்படி இருதரப்பு வாதங்களையும் பரிசீலனை செய்து பார்க்கையில் தாவா வழக்கினை மனுதாரர்கள் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்துள்ளார்கள். மேலும், மனு சொத்துக்களான ஏ, பி மற்றும் சி ஷெட்டியூல் சொத்துக்கள் ஆதியில் ஒரே சொத்துக்களாக இருந்து மனுதாரர்கள் வசதிக்கு ஏற்ப மனு ஏ மற்றும் சி ஷெட்டியயூல் சொத்துக்களில் வீடு கட்டி குடியிருந்து கொண்டு ஏ ஷெட்டியூல் சொத்தில் கட்டுப்பட்ட பூர்வீக சொத்தான பி ஷெட்டியூல் சொத்தை மனுதாரர்கள் குடும்பத்திற்கு மட்டும் பாதையாக பயன்டுத்தி வருவதாக மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ளார்கள்.

9. அதனை மறுத்து 1ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையில் தாவா பி ஷெட்டியூல் சொத்து சர்க்கார் புறம்போக்கு பொது சந்து பொது பாதை என்றும், தாவா டி ஷெட்டியூல் சொத்து 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியமானது என்றும், தாவா பி

ஷெட்டியூல் சொத்திற்கு பாதையாக தாவா பி ஷெட்டியூல் சொத்து உள்ளது என்றும் மறுத்துரைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு உள்ளபோது மனுதாரர்கள் மனு ஏ மற்றும் சி ஷெட்டியயூல் சொத்துக்களில் வீடு கட்டி குடியிருந்து கொண்டு ஏ ஷெட்டியூல் சொத்தில் கட்டுப்பட்ட பூர்வீக சொத்தான பி ஷெட்டியூல் சொத்தை மனுதாரர்கள் குடும்பத்திற்கு மட்டும் பாதையாக பயன்டுத்தி வருவதாக கூறியுள்ளதை நிரூபிக்கும் விதமாக எந்தவொரு ஆவணத்தையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

10. மேலும், மனுதாரர்கள் மனுவில் தாவா பி ஷெட்டியூல் சொத்து மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து என்றும், அது அரசு புறம்போக்கு அல்ல என்றும், தாவா பி ஷெட்டியூல் சொத்து வருவாய் ஆவணங்களில் பொதுபாதை என்று கண்டுள்ளது மனுதாரர்களுக்கு மட்டும் பாத்தியப்பட்ட பொதுபாதை என்று குறிப்பிட்டதையும், 1ம் எதிர்மனுதாரர் பி ஷெட்டியூல் சொத்து சர்க்கார் புறம்போக்கு பொது சந்து பொது பாதை என்று குறிப்பிட்டுள்ளதைப் பார்க்கையில் அசல் வழக்கில் இருதரப்பிலும் விசாரணை செய்து அவர்கள் மூலம் குறியீடு செய்யப்படும் ஆவணங்களையும், வாய்மொழி சாட்சியங்களின் சாட்சியத்தையும் பரிசீலனை செய்து அதன் பிறகு பிறப்பிக்கப்படும் தீர்வு ஒரு அறுதியிட்ட தீர்வாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

11. மேலும், தாவா சொத்தை மனுதாரர்கள் எந்தவித ஆட்சேபனையும் இல்லாமல் அனுபவித்து வருகிறார் என்பதை முதலில் ஆதாரத்துடன் நிரூபிக்க வேண்டும். மாறாக நீதிமன்ற ஆணையரை நியமித்து வழக்கிற்கான ஆவணங்களை உருவாக்க முயலக்கூடாது என்று மாண்புமிகு உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றம் பல தீர்ப்புகளில் சொல்லியுள்ளது. மனுதாரர்களின் மனுவை ஆராய்கையில் மனு சொத்தில் மனுதாரர்கள் அனுபவம் செய்து வருவதற்கான எந்தவிதமான வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியம் மூலமாக நிரூபிக்கவில்லை. மாறாக தாவா சொத்து குறித்து சாட்சியங்களை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மட்டுமே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

**Gajendran Vs. Kupu and others (2017 (3) TLNJ 238 Civil)** என்ற வழக்கில்;

The court cannot appoint an Advocate commissioner in order to secure evidence which will support either of the parties. The parties to the suit are bound to establish their respective case through oral and documentary evidence and they cannot seek the assistance of the court to appoint an advocate commissioner for the collection of evidence or to establish their case.

**Sevugan Vs Chinnathambi 2016 SCC online MAD 30464** என்ற வழக்கில்**;**

It is settled law that Advocate commissioner cannot collect the evidence to prove the possession of the suit property.

மேற்படி வழக்கின் அடிப்படையில் ஆராய்கையில், அசல் வழக்கினை காலம் தாழ்த்தவே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மனுதாரர்கள் அவர்களுடைய வழக்கை நிரூபிக்க வேண்டி ஆதாரத்தை திரட்டும் நோக்கத்தின் அடிப்படையிலும், இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுவதால் மனுதாரர்கள் கோரியபடி அவர்களது மனு ஏற்கத்தக்கதல்ல என்று முடிவு செய்கிறது.

12. முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2024ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 23-ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

S GANESH
Digitally signed by S GANESH
Date: 2024.10.23 15:55:00 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:
- இல்லை-

S GANESH
Digitally signed by S GANESH
Date: 2024.10.23 15:55:06 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.